# THE RECENT TREND OF THE CEYLON WORKERS CONGRESS ( A SPECIAL STUDY ON 2015 PRESIDENTIAL ELECTION – NUWARAELIYA DISTRICT)

LIBRARY
22 DEC 2016
EASTERN UNIVERSITY, SRI LANKA

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
0 5 JUL 2016
Vantharumoolai
Chenkalady

**MISS. CHANDRASEGARAN SATHIYAROOBY**

**2010/2011**

FAC448
Project Report
Library - EUSL

**DEPARTMENT OF SOCIAL SCIENCES,**

**(POLITICAL SCIENCE)**

**FACULTY OF ARTS & CULTURE,**

**EASTERN UNIVERSITY,**

**SRI LANKA.**

**2016.**

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அண்மைக்கால போக்கு (ஒரு விசேட ஆய்வு 2015 ஜனாதிபதி தேர்தல் - நுவரெலியா மாவட்டம்) என்ற தலைப்பின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலையக மக்களின் வாழ்க்கையோடு தொழிற்சங்கங்கள் இரண்டறக் கலந்த ஒரு விடயமாகும். இதனால் தொழிற்சங்கங்களிலிருந்து மலையக மக்களைப் பிரித்து பார்க்க முடியாது. அந்தவகையில் மலையக மக்களின் நலன் கருதி பல தொழிற்சங்கங்கள் காணப்படுகின்றன. இவை தேர்தல் காலங்களில் கட்சிகளாகவும் தொழிற்படுகின்றன. இக்கட்சிகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஒன்றாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது 1939ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. இக்கட்சி மலையகத்தில் பழம்பெரும் கட்சியாகவும், அரசியல் செல்வாக்கு மிகுந்த அமைப்பாகவும் காணப்படுகின்றது. இதன் பிரதான கொள்கை ஆளுங்கட்சிகளுடன் கூட்டுசேர்வதன் மூலம் இந்திய வம்சாவழி தமிழ் மக்களினுடைய நன்களை பேணுதல் என்பதாகும். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தால் நடாத்தப்பட்ட தேர்தல்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர் கட்சியாக இருந்ததில்லை. ஆளும் கட்சியுடன் கூட்டுசேர்வதிலேயே கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையில் இதுவரை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களின் போதும் தமது ஆதரவினை ஆளும் கட்சி சார்பாகவே தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் நிமித்தம் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதும் ஆளும் கட்சி சார்பாக தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட அப்போதைய ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அவர்களுக்கு தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தது. இருந்தபோதிலும் இலங்கையின் ஏழாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக மைத்திரிபாலசிறிசேன அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இச்சூழலில் இந்திய வம்சாவளி தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.காவின் அண்மைக்கால நிலைமை எவ்வாறானதாக காணப்படுகிறது என்பதனை அறியும் பொருட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற ஏனைய பிரதான அரசியல் கட்சிகளான தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தீர்மானத்தோடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உடன்பட்டு செயற்பட்டிருக்கவில்லை. இதனடிப்படையில் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நுவரெலியா மாவட்டத்தின் இந்திய வம்சாவளி தமிழர்கள் மத்தியில் இ.தொ.காவின் அரசியல் செல்வாக்கு மட்டம் மாற்றம் அடைந்துள்ளதா? என்பது இவ்வாய்வின் பிரச்சினையாக காணப்பட்டது.

இப்பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதான நோக்கம், உபநோக்கங்கள் ஆகியன முன்வைக்கப்பட்டு தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வாய்விற்கான பிரதான நோக்கமாக “இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அண்மைக்கால அரசியல் செல்வாக்கு நிலைமையினை கண்டறிதல்.” என்பது முன்வைக்கப்பட்டது. இதன்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது அண்மைக்காலமாக நுவரெலியா மாவட்ட இந்திய வம்சாவழி தமிழர்கள் மத்தியில் அரசியல் செல்வாக்கினை இழந்துள்ளது என்ற தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் இவ்வாய்விற்காக முன்வைக்கப்பட்ட பிரதான நோக்கம் அடையப்பட்டது.

இவ்வாய்வினுடைய கருதுகோளாக “இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அண்மைக்கால தலைமைத்துவத்தின் அரசியல் சாணக்கியமின்மையே அதன் வீழ்ச்சியாகும்” என்பது முன்வைக்கப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சந்தர்ப்பவாதபோக்கு, ஆளும்கட்சி சார்பான கொள்கை, குடும்ப ஆட்சி, தொடர்ச்சியான பாராளுமன்ற அங்கத்துவம், அரசியலில் ஏற்பட்ட தொய்வும், சலிப்பும் ஆகிய காரணங்களினடிப்படையில் இக்கருதுகோள் மெய்ப்பிக்கப்பட்டது.

எனவே இவ்வாய்வின் மூலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது அண்மைக்காலமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்ற முடிவு பெறப்பட்டுள்ளது. அத்துடன் இக்கட்சி எதிர்காலத்தில் எழுச்சியடைவதற்கான பரிந்துரைகளும் ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டு ஆய்வு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்

உறுதியுரை

நன்றியுரை

பக்கம்

ஆய்வுச் சுருக்கம் ........................................ i

பொருளடக்கம் ........................................ iii

சுருக்கக்குறிப்புக்கள் ........................................ vii

## அத்தியாயம் 01

## ஆய்வு அறிமுகம்

1.1 அறிமுகம் ........................................ 01

1.2 ஆய்வுப் பிரச்சினை ........................................ 02

1.3 ஆய்வு நோக்கங்கள் ........................................ 02

1.4 ஆய்வு வினாக்கள் ........................................ 03

1.5 கோட்பாட்டு விளக்கம் ........................................ 03

1.6 ஆய்வு கருதுகோள் ........................................ 07

1.7 ஆய்வு முறையியல் ........................................ 07

1.8 ஆய்வு முக்கியத்துவம் ........................................ 07

1.9 ஆய்வு வரையறை ........................................ 08

1.10 இலக்கிய மீளாய்வு ........................................ 08

1.10.1 நூல்கள் ........................................ 08

1.10.2 சஞ்சிகைகள் ........................................ 11

1.10.3 பத்திரிகைகள் ........................................ 12

1.10.4 இணையத்தளங்கள் ........................................ 14

1.11 ஆய்வு இடைவெளி ........................................ 17

1.12 அத்தியாய விளக்கம் ........................................ 18

## அத்தியாயம் - 02

## மலையக மக்களும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும்

2.1 அறிமுகம் ........................................ 19

2.2 மலையக மக்களின் வரலாறு ........................................ 20

2.3 ஆய்வு பிரதேச அறிமுகம் ........................................ 22

2.4 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோற்றம், வளர்ச்சி ........................................ 23

2.5 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைத்துவப் போக்கு ........................................ 30

2.5.1 அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் தலைமைத்துவம் ........................................ 30

2.5.2 தற்போதைய பொது செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் தலைமைத்துவம் ........................................ 32

2.6 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொள்கைகள் ........................................ 33

2.7 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பலத்திக்கான காரணிகள் ........................................ 34

2.8 முடிவுரை ........................................ 35

## அத்தியாயம் - 03

## மலையக சூழலும் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும்

3.1 அறிமுகம் ........................................ 36

3.2 இலங்கையின் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் ........................................ 37

3.3 பிரதான இரு வேட்பாளர்களின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்கள் ........................................ 40

3.3.1 முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் ........................................ 40

3.3.2 பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் ........................................ 42

3.4 இலங்கையின் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் ........................................ 45

3.5 நுவரெலியா மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அவர்களின் தோல்விக்கான காரணிகள் ........ 49

3.6 நுவரெலியா மாவட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அவர்களின் தேர்தல் வெற்றிக்கான காரணிகள் ........ 50

3.7 முடிவுரை ........ 51

## அத்தியாயம் 04

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அண்மைக்கால போக்கு

4.1 அறிமுகம் ........ 52

4.2 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அண்மைக்கால போக்கில் மலையக மக்களின் பங்கு ........ 52

4.2.1 வாழ்க்கை மாற்றத்தை சிந்தித்த மலையக மக்கள் ........ 54

4.3 நுவரெலியா மாவட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் அண்மைக்கால எழுச்சி ........ 57

4.3.1 தொழிலாளர் தேசிய சங்கத்தின் எழுச்சி ........ 57

4.3.2 மலையக மக்கள் முன்னணியின் எழுச்சி ........ 61

4.3.3 தமிழ் முற்போக்கு கூட்டணியின் எழுச்சி ........ 62

4.4 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைத்துவத்தின் அசாதாரண செயற்பாடுகள் ........ 64

4.5 மலையகத்தில் சிவில் அமைப்புக்களின் எழுச்சி ........ 66

4.6 முடிவுரை ........ 68